வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : STC 1197 of 2022

வழக்கு சாட்சி - DW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வடிவவேல் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியம் | வயது | : | |
| கிராமம் | : | கல்லம்பாளையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18.07.2025.

**பிரமாண வாக்குமூலம் :** **நாள்: 18.07.2025**

1)நான் இந்த வழக்கில் எதிரி ஆவேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் தாக்கல் செய்கிறேன். புகார்தாரர் என்னுடைய மனைவியின் உடன் பறிந்த சகோதரர். எனக்கு 1993 ஆம் வருடம் திருமணம் நடைபெற்ற காலத்தில் இருந்து புகார்தாரர் தோட்டத்தில் வசித்து வருகிறேன். புகார்தாரருக்கு தொழில் எதும் இல்லாத காரணத்தினால் 1998 ஆம் வருடத்தில் மாமானார் சொத்தை வைத்து அடமானம் பெற்றார்கள் தொழில் ஆரம்பித்தோம். மேற்படி ஸ்தபானத்தின் பெயர் பாலமுருகன் டெக்ஸ்டைல்ஸ் ஆகும் அதே பெயரிலியே டெம்போ சர்வீஸ் உள்ளது. மேற்படி புகார்தாரர் முகவரியிலையே இயங்கி வந்தது. மேற்படி ஸ்தாபனத்தை புகார்தாரரும் அவரது குடும்பத்தினரும் இயக்கி வந்தார்கள். வங்கி நிர்வாகம் மற்றும் வரவு செலவு புகார்தாரர் அவர் உடன்பிறந்தவருகளும் நிர்வகித்து வந்தார்கள். 2008 ஆம் வருடத்தில் கூட்டுறவு வங்கியில் இருந்த கடனை புகார்தாரர் மற்றும் எதிரி குடும்பத்தினரும் சேர்ந்து இரத்து செய்தோம். மேற்படி ராமசாமி பெயரில் உள்ள சொத்தினை அடமனாம் செய்து சிட்டி யூனியன் வங்கியில் அடமானம் பெற்றோம். மேற்படி 20 லட்சம் கடன் பெற்று புகார்தாரர் நாராயணமூர்த்தி தொழில் நிர்வகித்து வந்தார்.

2) 2010 ல் கடன் வாங்கி 2013 ல் வங்கி கணக்கு NPA அறிவிக்கப்பட்டது. மேற்படி கணக்கிற்கு செலத்தவேண்டிய தொகையினை புகார்தாரரும் அவரது குடும்பத்தினரும் செலுத்தினர். மேற்படி கடனை செலுத்திவிட்டு அடமான சொத்தினை புகார்தாரர் தன் பெயருக்கு தான செட்டில்மன்டாக எழுதிவிட்டார். மேற்படி வழக்கு காசோலை நாங்கள் கூட்டு குடும்பமாக இருந்த காலகட்டத்தில் புகார்தாரர் 2013 ஆம் வருடத்தில் எடுத்துவைத்துக்கொண்டு தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு பொய் வழக்கு. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மேற்படி சங்கதிகளுக்கு ஆதரவாக

29.11.2017 ஆம் ஆண்டு தான செட்டில்மண்ட் பத்திரம் கணினி நகல்,-எ.ம.சா.1

26.03.1998 அடமான கடன் பத்திர நகல் -எ.ம.சா.2

26.03.1998 அடமான கடன் பத்திர கணினி நகல் -எ.ம.சா.3

(புகார்தாரர் தரப்பில் மேற்படி 3 ஆவணமும் இவ்வழக்கிற்கு சம்மந்தம இல்லாத ஆவணம் என்று ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1)கூட்டு குடும்பத்தில் இருந்து நாங்கள் வெளிவந்தோம் என்றால் 2015 ல் வெளிவந்தோம். சிட்டி யூனியன் வங்கியில் கடன் பெற்றதாக என் முதல் விசாரணையில் சொல்லியிருப்பதை என் பெயரில் கடன் வாங்கினேனா என்றால் என் பெயரிலும் என் மாமானார் பெயரிலும் கடன் வாங்கினேன். என் முதல் விசாரணையில் பாலமுருகன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தை புகார்தாரர் நிர்வகித்ததாக கூறியுள்ளேன் அதன் உரிமையாளர் யார் என்பதை நிருபிக்கும் விதமாக ஆவணங்கள் எதும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. என் முதல் விசாரணையில் 1998 ஆம் ஆண்டு புகார்தாரரும் அவரது குடும்பத்தினரும் கூட்டுறவு பிரதம நில வள வங்கி அடமானம் வைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் அடமானத்தை இரத்து செய்துவிட்டேன்

என்று சொல்வதற்கு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கின் புகார்தாரர் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சிட்டி யூனியன் வங்கியில் நானும் எனது மாமானார் ராமசாமியும் கடன் பெற்றுயிருப்பதாக கூறியிருப்பதற்கும் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) நானும் எனதுமாமானாரும் கடன் பெற்ற சிட்டி யூனியன் வங்கியின் கணக்கு NPA ஆனதாக எனது முதல் விசாரணையில்செல்லியுள்ளதற்கு ஆவணம் எதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா எனறால் இல்லை. கடன் பெற்று வந்த தொகையில் தொடங்கப்பட்ட தரி குடனை புகார்தாரர்தான் நிர்வகித்து வந்தார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளதற்கு எதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3)காசோலை 2013 ல் புகார்தாரர் எடுத்ததாக என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதற்கு அந்த காலகட்டத்தில் புகார் எதும் தரவில்லை ஆனால் 2022 ல் புகார் தந்துள்ளேன்.மேற் சொன்ன விஷயத்தை என் முதல் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) அந்த செட்டில்மென்ட் ஆவணத்தின் தற்போதைய உரிமையாளர் புகார்தாரரோ அவரது தந்தையோ இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செட்டில்மென்ட் ஆவணத்தில் சொல்லியுள்ள என் சொத்து விவரங்கள் பொருத்து பாகபிரிவினை வழக்கு ஆ.வ.எண்67/2020 வழக்கில் என்னுடைய மனைவி ராசாத்தி 2வது பிரதி வாதியாக இருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த புகார்தாரரோடு உடன் பிறந்து ராசாத்தி ,ராஜேந்திரன், ராஜேஸ்வரி மற்றும் அவரது தகப்பனார் ராமசாமிக்குள்ளும் எந்த வரவு செலவுகளும் இல்லை என்றால் எனக்கு தெரியாது.

5) நான் தற்சமயம் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ட்ரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறேன். நானும் எனது மாமானாரும் பெற்ற கடனை நானும் எனது மாமானாரும் சேர்ந்து சென்று செலுத்தினோமா என்றால் நான் செல்லவில்லை. எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. புகார்தாருக்கு ஆதரவாக வழக்கு தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.07.18 18:28:06 +0500

நீதித்துறை நடுவர் ,

பல்லடம்.